## ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

Since 1951

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020. தமிழ்நாடு, இந்தியா

பொருண்மை :

# பன்முகத் தளத்தில் தமிழியல்

நாள் : 28.11.2019 (வியாழக்கிழமை)

UGC

## முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்

– பன்னாட்டுக் கருத்தரங்கம் –

## வளநபர்ச் சான்றிதழ்

திரு. / திருமதி / செல்வி முனைவர் சு. ஏஞ்சல் லதா
வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம் அவர்க
'நான்மணிக்கடிகை கூறும் இல்வாழ்க்கை நெறி
........என்னும் தலைப்
கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகி

முனைவர் க. சிராஜுதீன்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் & செயலாளர்

முனைவர் அ. செயத் ஜாகீர் ஹசன்
தமிழ்த்துறைத்தலைவர் (பொ)
கலைப்புல முதன்மையர்

முனைவர் S. இஸ்மாயில்
முதல்வர்

சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

**Chief Editor**

*Dr. M. Sadik Batcha*

**Advisory Editor**

*Dr. N. Chandrasegaran*

**Editorial Board**

*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr. A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R. Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

6 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 61. | சா. இளையராஜா | இல்லறம் வாழ்வியலில் கலை | 219-222 |
| 62. | க. இளையராஜா | கரகத்தின் தோற்றமும் அதன் படிநிலைகளும் | 223-225 |
| 63. | ஆ. இன்பென்ட் பஞ்சராஜ் | கங்கணம் புதினத்தில் பாலியல் சிக்கல்கள் | 226-229 |
| 64. | பி. இன்னமுது | பழந்தமிழகத்தில் பரத்தையர் | 230-233 |
| 65. | தி. ஈஸ்வரி | திருவையாறு வட்டார நிலவியல் அமைப்பு | 234-238 |
| 66. | கோ. உமா | பெரியபுராணத்தில் வேளாண் சமுதாயம் | 239-241 |
| 67. | ம. உமாமகேஸ்வரி | திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடலில் அகப்பொருள் | 242-244 |
| 68. | த. உஷா நந்தினி நாச்சியார் | மலசரின் உணவு, உடை முறைகள் | 245-247 |
| 69. | செ. உஷா | திருக்குறள் காட்டும் இறைநெறி | 248-250 |
| 70. | க. எஞ்சல் லதா | நான்மணிக்கடிகை கூறும் இல்வாழ்க்கை நெறி | 251-253 |
| 71. | க. எஞ்சல் ஜெயசெல்வ ராணி | சங்க இலக்கியத்தில் காணலாகும் தமிழர் சடங்கு முறைகள் | 254-256 |
| 72. | மு. ஏழுமலை | புறநானூற்றில் நிர்வாகவியல் சிந்தனைகள் | 257-260 |
| 73. | N. ஐயப்பன் & பா. சிறியபுஷ்பம் | மதுரைக்காஞ்சி கூறும் தொழில்கள் | 261-263 |
| 74. | கணேசன்.நா | நியூட்ரினோ ஆய்வில் குறிஞ்சியின் பங்கு | 264-267 |
| 75. | ப. கணேஷ்வடிவேல் | புறநானூற்றில் மனித உரிமைகள் | 268-271 |
| 76. | எஸ். கணேஷ் | வள்ளலாரின் சாதி மறுப்பும் காந்தியடிகளின் சாதி ஒழிப்பும் | 272-275 |
| 77. | கு. கண்ணன் | சிறுபஞ்சமூலம் காட்டும் பண்பாட்டுச் செய்திகள் | 276-280 |
| 78. | திரு.இரா.கண்ணன் | அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள் | 281-284 |
| 79. | இரா.கண்ணன் | குறுந்தொகையில் மக்கள் வாழ்வியல் | 285-286 |
| 80. | அ. கமலம் | பட்டினப்பாலை-நான்மணிக்கடிகையில் பொருளியல் சிந்தனை | 287-290 |
| 81. | ப. கமலா & இரா. சதாசிவம் | மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி கோயில் வழிபாடும் நம்பிக்கையும் | 291-294 |
| 82. | ஆ. கமலா | கலைஞரின் கவிதை மழையில் - இராவணன் பாத்திரப்படைப்பு | 295-299 |
| 83. | கோ.கருணாகரன் | குரவைக்கூத்து | 300-303 |
| 84. | ச. கலாதேவி | உ.வே.சா. குறுந்தொகை உரை இயல்புகள் | 304-307 |
| 85. | த.கலாஸ்ரீதர் | ஆவணங்களில் காணப்படும் கவர்னர்களும், துபாஷிகளும், தமிழகத்தை கொள்ளையடித்த செய்திகள் | 308-311 |
| 86. | கோ.கலைச்செல்வி | முகிலை இராசபாண்டியனின் அருகருகே நான்கு வீடுகள் நாவலில் வட்டார வழக்கின் செல்வாக்கு | 312-315 |
| 87. | இரா. கலைச்செல்வி | பயிர் முகங்கள் புதினத்தில் முதியோர் சமுதாயம் | 316-318 |
| 88. | செ.கலைமணி | முகிலினி நாவல் - ஓர் ஆய்வு | 319-322 |
| 89. | ஞா.கலையரசி | பெரியபுராணம் காட்டும் விருந்தோம்பல் | 323-325 |
| 90. | கலைவாணி இளங்கோ | திருக்குறளும் சிங்கப்பூர் கல்விக் கொள்கையும் | 326-328 |
| 91. | அ.கலைவாணி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 329-331 |
| 92. | இரா. கலைவாணி | கற்றாழை புதினத்தில் மணிமேகலை | 332-337 |
| 93. | சி.கலைவாணி | சித்தர்கள் கூறும் சமுதாயச் செய்திகள் | 338-340 |
| 94. | அ. கல்பனாதேவி | குறுந்தொகையில் அஃறிணை உயிர்களின் இயல்பு | 341-343 |
| 95. | ஆ.கவிதாராணி | கிழக்குக் கடற்கரையில் வணிகம் | 344-347 |
| 96. | இரா. கவிதா & த. கருப்பையா | கல்விப் புலத்தில் மகளிரும் பாலியல் பாடுகளும் ('சங்கவை' புதினத்தை முன்வைத்து) | 348-350 |
| 97. | இல. கவிதா | சிலப்பதிகாரத்தில் பாடவேறுபாடுகள் | 351-353 |
| 98. | ந. கவிதா | தமிழ் இலக்கியங்களில் பல்லுயிரியப் பாதுகாப்பு | 354-356 |
| 99. | மு. கவிதா | குறுந்தொகையில் ஐந்திலத் தலைவி | 357-359 |
| 100. | மு. கவிதா | சித்தர்கள் போற்றிய தமிழும் அறக்கோட்பாடுகளும் | 360-363 |
| 101. | வா. ச. கவிதா | சிறுபாணாற்றுப்படையில் இனவரைவியல் | 364-366 |
| 102. | வீ. கவிதா | காலத்தை வென்ற பரிபாட்டு | 367-368 |
| 103. | வை. கவிதா | ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் | 369-372 |
| 104. | பா. கனிமொழி | தாக்கும் தன்மையறிந்த தமிழர் போர் அரசியல் திருக்குறளை முன்வைத்து | 373-378 |
| 105. | கா. காமாட்சி | சங்கர நமச்சிவாயரின் மேற்கோள் ஆளுமை | 379-381 |
| 106. | வெ. காமினி | அகநானூற்றில் வழி அறியலாகும் ஆலமரம் | 382-384 |
| 107. | ரா.காயத்ரி | சுந்தர காண்டத்தில் அனுமன் | 385-388 |
| 108. | செ.கார்குழலி | பழந்தமிழரின் பண்பும் நவீனப் பண்பும் | 389-392 |
| 109. | வேல். கார்த்திகேயன் | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் | 393-397 |
| 110. | செ.ர. கார்த்திக் குமரன் | தனிமையின் இரு முகங்களும் இயல் கடந்த இருத்தலும் மொழிபெயர்ப்புப் பிரதிகளை முன் வைத்து | 398-401 |
| 111. | அ. கார்முகிலன் | தொல்காப்பியர் காலக் குலக்குறியீட்டுப் பண்பாடு | 402-404 |
| 112. | ஜெ. காவேரி | ஈரோடு தமிழன்பன் கவிதைகள் சுட்டும் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள் | 405-407 |
| 113. | ந. கிருத்திகா | வள்ளுவரும் வாழ்வியலும் | 408-411 |
| 114. | க. கிருஷ்ணமூர்த்தி | பழந்தமிழர் சிந்தனையில் ஊழ் | 412-414 |
| 115. | தி. நா. கிருஷ்ணமூர்த்தி | பன்முகத் தளத்தில் கம்பன் தமிழ் | 415-417 |
| 116. | ப. கிருஷ்ணமூர்த்தி | புறநானூறு காட்டும் கடவுளும் தெய்வமும் | 418-422 |
| 117. | தி. கிருஷ்ணவேணி | மருக்கை நாவலில் இடையர் வாழ்வியல் | 423-426 |
| 118. | ச. கிருஷ்ணவேணி | திருக்குறள் உணர்த்தும் அறம் | 427-430 |
| 119. | அ.கிரேஸி ஜெனோவா | இலக்கியங்களில் கல்வி | 431-434 |
| 120. | அ. கிறிஸ்டல் ஷீபா | அகநானூறு குறிப்பிடும் நடுகல் வழிபாடு | 435-436 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# நான்மணிக்கடிகை கூறும் இல்வாழ்க்கை நெறி

முனைவர் சு. ஏஞ்சல் லதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வாவு வஜிஹா வனிதையர் கல்லூரி –காயல்பட்டினம்,
தமிழ்நாடு, இந்தியா.

நான்மணிக்கடிகை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் 106 வெண்பாக்களைக் கொண்டது. மனித வாழ்விற்குத் தேவையான நீதிகளும் அறநெறிகளும் மிகுந்து காணப்படுகின்றன. இந்நூலில் இடம் பெற்றுள்ள இல்வாழ்க்கை நெறிகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இல்வாழ்க்கை**

வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகவும் வாழ்வியல் விழுமியங்களில் சிறப்பான இடத்தையும் பெற்றிருப்பது இல்வாழ்க்கையாகும். இவ்இல்வாழ்க்கை உலகின் நிலைப்புத் தன்மைக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் அடிப்படைக் காரணமாகின்றது. இல்வாழ்க்கை என்பது ஒத்த வயது மற்றும் தகுதியுடைய ஆடவனும் பெண்ணும் பெரியோர் முன்னிலையில் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வதாகும். "இல்வாழ்க்கை என்பது மனை வாழ்க்கை. அது கிழவோன் மகிழ்ச்சி முதலாக செவிலி மகிழ்ச்சி யீறாகாவாம்" என விளக்கம் தருகிறது மதுரை தமிழ்ப் பேரகராதி (2004: 292)

**மாண்புடைய மகளிர்**

திருமணம் செய்த மணமக்களின் இல்வாழ்க்கை சிறக்க தலைவியின் நற்செயல்கள் காரணமாகின்றன. மனைவியின் மாண்புகளைத் தொல்காப்பியர்:

**"கற்புங் காமமும் நாற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"**
**(தொல். கற். 11)**

என்று குறிப்பிடுகின்றார்.

தலைவி கற்பில் சிறந்தவளாகவும் அன்புடையவளாகவும் இல்லறத்திற்குரிய ஒழுக்கம் உடையவளாகவும் பொறுமை உடையவளாகவும் தன்னடக்கத்தினைக் கொண்டு வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு ஏற்று உபசரிக்கும் தன்மையுடையவளாகவம் இருப்பதே தலைவியின் மாண்புகளாகும். இத்தன்மையுடையத் தலைவியை தலைவனும் அவனைச் சார்ந்த சுற்றத்தாரும் விரும்புவர். தலைவியின் வாழ்வும் மேன்மையடையும். எனவே தான்,

**"நிறை நின்ற பெண் நன்று"(நா.கடிகை. 15)**

என்று விளம்பிநாகனார் கூறுகின்றார்.

நிறை என்பது இல்வாழ்விற்குரிய கற்பினைக் குறிப்பிடுகின்றது. தான் கொண்ட கொழுநனை என்றும் பிரியாமல் அவனோடு சேர்ந்து வாழ்தலாகும். அதாவது தான் திருமணம் செய்து கொண்ட கணவனின் வருவாய் குறைந்து வறுமையுற்ற போதும் நோயுற்ற போதும் தான் கொண்ட இல்வாழ்க்கையே சிறந்தது என்ற ஒரே சிந்தையோடு இருக்க வேண்டும் இம்மன நிலை சமுதாயத்தில் வளர்ந்தால் இல்வாழ்வில் பிரிதல் என்பதே இல்லை. மேலும்,

**"மனைக்காக்கம் மாண்ட மகளிர்"**
**(நா.கடிகை. 20)**

என்கின்றார். மாண்புடைய மகளிரால் இல்வாழ்க்கை உயரும்.

"………………… உருவோடு
அறிவுடையார் இல்வாழ்க்கைப் பெண்ணென்ப"
( நா.கடிகை. 53)

உருபு என்பது அழகு என்று பொருள்படும். இங்குப் புறஅழகு மட்டுமன்று. அகஅழகாகும் அதாவது

இருதயத்தில் நிறைந்திருக்கும் நற்குணங்களும் சிறந்த அழகாகும். விட்டுக்கொடுத்தல், அன்பு, சகிப்புத்தன்மை, பொறுமை இவை புறத்தோற்றத்தில் தெரியாதவை. எனவே இக்குணங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் நற்குணங்களாகும். நற்குணங்களோடு கல்வி அறிவும் அனுபவ அறிவும் உடையவள் இல்வாழ்க்கைக்குரிய நல்ல துணையானவள்.

**இல்லறத்தின் விளக்கு**

விளக்கு இருளைப் போக்கி வெளிச்சம் கொடுக்கும். அதுபோல இல்லத்தரசியும் இல்லறத்தில் ஏற்படும் இருளைப் போக்கி வெளிச்சம் கொடுப்பவள் ஆவாள். எனவே தான்,

**"மனைக்கு விளக்கம் மடவார்: மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர்"**
**(நா.கடிகை. 105)**

என்கிறார். இல்லறத்திற்கு ஒளிவீசும் விளக்கு மனைவி. அம்மனைவிக்கு ஒளிவீசும் விளக்காவது தகுதி வாய்ந்த மக்கள். இல்லறத்தில் ஏற்படும் சிறுசிறு தவறுகளைச் சுட்டிக்காட்டி குற்றங்களைக் கடிந்துகூறித் திருத்தும் தன்மையுடையவள் மனைவி . எனவே தான் இல்லறத்திற்கு ஒளிவீசும் விளக்கு என்று குறிப்பிடப்படுகின்றாள்.

**விருந்தோம்பல்**

தம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு வகைகளை அளித்து அன்போடும் மகிழ்ச்சியோடும் உபசரிப்பதே விருந்தோம்பல் எனப்படும். இவ்விருந்தோம்பல் பண்பாடும் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகும். இதனை

நான்மணிக்கடிகை,

**"................... கலம்பரப்பி**
**நன்றூட்ட நந்தும் விருந்து."(நா.கடிகை. 63)**

என்று கூறுகின்றது.

உண்கலம் வைத்து இனிமையாக விருந்தளித்தால் விருந்தினர் மனம் மகிழ்வர். நம் சுற்றத்தினர் மகிழ்ச்சி அடையும் போது முன் ஏதாவது சிறுகுற்றங்களால் ஏற்பட்ட பகை, விரோதம், கோபம் மறைந்து இல்வாழ்க்கை சிறக்கும். பகைமை இல்லாத சமுதாயம் உருவாக விருந்தோம்பல் காரணமாக அமையும். இதனை " உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணாதே" என்ற பழமொழியும் அறிவுறுத்துகிறது.

**"..................தான் கொடுக்கும்**
**சோற்றான் வி(று) எய்தும் குடி"**
**(நா.கடிகை. 72: )**

என்ற பாடலடிகளில் வறியவர்க்கு உணவு அளிப்பதால் ஒருவனது குடிமேலோங்கும். பசித்த ஒருவர் உணவு உண்டு வாழ்த்துவதால் இறையருள் கிடைக்கும். அதனால் நம்குடிப் பெருமை உயரும். இதனால் விருந்தோம்பல் காரணமாகப் பகைமை மறைந்து குடிப்பெருமை உயரும் தன்மையும் புலனாகின்றது.

**வறியவர்க்கு உதவுதல்**

நாம் பிறந்த குடியிலும் சேர்ந்த சமுதாயத்திலும் நலிந்தவர்க்குக் கைப்பொருளினாலும் அறிவினாலும் உதவி செய்தல் வேண்டும் என்பதை இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன. இதனை,

**"................. எடுப்பின்**
**கிளையுள் கழிந்தார் எடுக்க"**
**(நா.கடிகை. 82: 2,3)**

என்ற பாடலடிகளில் காணலாம்.

இல்வாழ்வில் ஈடுபட்ட ஒருவர் ஒருவரை உயர்த்த வேண்டும் என்று விரும்பினால் உறவினருள் வறியவரைக் கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்த்த வேண்டும். நீக்க வேண்டும் என்று விரும்பினால் சினத்தை விட வேண்டும்.

**கல்வி அறிவூட்ட அறிவுறுத்தல்**

நான்மணிக்கடிகை தான் ஈன்றெடுத்த குழந்தைகளுக்குக் கல்வி அறிவூட்டி வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது. இதனை,

"........................ மக்களைக்
கல்லா வளர விடல் தீது"
(நா.கடிகை. 95)

என்று கூறுகின்றது.

இல்வாழ்வில் ஈடுபட்டு பிள்ளைகளைப் பெற்றவர்கள் தாம் பெற்ற பிள்ளைகளைக் கல்வி அறிவு பெற்றுக் கொள்ளாமல் வளர்த்தல் சமுதாயத்திற்கே தீங்கு விளையும். எனவே தான் வள்ளுவர்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள்: 67)

என்கிறார். தந்தை மகனுக்குச் செய்யும் உதவி தன் மகனுக்கு நல்ல கல்வியறிவைக் கொடுத்து சான்றோர்கள் கூடியிருக்கும் அவையில் முந்தியிருக்கச் செய்வதே ஆகும்.

## பொருளைப் பெற்றுக் கொள்ளும் வழி

சிறந்த இல்வாழ்க்கை நடத்த பொருள் தேவை. அந்தப் பொருளையும் அறவழியில் ஈட்டவேண்டும். இதனை,

"பொருளினால் ஆகுமாம் போகம்"
(நா.கடிகை. 103:)

என்கிறார் விளம்பிநாகனார்.

அறவழியில் பொருளைப் பெருக்குவதால் மட்டுமே இன்ப வாழ்க்கை உண்டாகும். எனவே இல்வாழ்விற்குத் தேவையான பொருளையும் பிறருக்குக் கேடுண்டாக்காமல் அறவழியில் உண்டாக்க வேண்டும்.

"நான்மணிக்கடிகையில் இல்வாழ்க்கை நெறி' என்னும் இக்கட்டுரையில் இல்வாழ்க்கை, மாண்புடைய மகளிர், இல்லறத்தின் விளக்கு, விருந்தோம்பல், வறியவர்க்கு உதவுதல், கல்வி அறிவூட்ட அறிவுறுத்தல், பொருளைப் பெற்றுக் கொள்ளும் வழி போன்ற பகுதிகள் வாழ்வியல் கூறுகளாக இடம் பெற்றுள்ளன.